பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_1

**சான்று:-** எனக்குப் பிடித்த நிறம் ஊதா.

☐ உனக்குப் பிடித்த நிறம் வெள்ளையா?

☑ உனக்குப் பிடித்த நிறம் என்ன?

☐ உனக்கு ஊதா நிறம் பிடிக்குமா?

1. நான் மாலையில் எனது நண்பருடன் விளையாடுவேன்.

☐ நீ மாலையில் யாருடன் விளையாடுவாய்?

☐ நீ மாலையில் விளையாடுவாயா?

☐ நீ மாலையில் என்ன விளையாடுவாய்?

2. ஆமாம்! நான் பாகற்காயை விரும்பி உண்பேன்.

☐ உனக்குப் பிடித்த காய் எது?

☐ பாகற்காயை நீ விரும்பி உண்பாயா?

☐ கத்தரிக்காயை நீ விரும்பி உண்பாயா?

3. எனது வீட்டில் மூன்று அறைகள் உள்ளன.

☐ உனது வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன?

☐ உனது வீட்டில் எந்த அறைகள் உள்ளன?

☐ உனது வீட்டில் எவ்வளவு அறைகள் உள்ளன?

4. எனக்கு இரண்டு நண்பர்கள்.

☐ உனக்கு நண்பர்கள் இருக்கிறார்களா?

☐ உனக்கு எத்தனை நண்பர்கள்?

☐ உனக்கு எவ்வளவு நண்பர்கள்?

பெயர்: ........................... தேதி: ...........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. எனக்குப் பிடித்த விளையாட்டு மட்டைப்பந்து.

- ☐ உனக்குப் பிடித்த விளையாட்டு எது?
- ☐ உனக்கு எப்படி விளையாடப் பிடிக்கும்?
- ☐ உனக்குப் பிடித்த விளையாட்டு எவ்வளவு?

2. இல்லை! எனக்கு வெண்டைக்காய் பிடிக்காது.

- ☐ உனக்கு பிடித்த காய் எது?
- ☐ உனக்கு கத்தரிக்காய் பிடிக்குமா?
- ☐ உனக்கு வெண்டைக்காய் பிடிக்குமா?

3. எனக்கு ஒரு சகோதரர்.

- ☐ உன்னுடைய சகோதரர்கள் யார்?
- ☐ உனக்கு இரண்டு சகோதர்களா?
- ☐ உனக்கு எத்தனை சகோதரர்கள்?

4. நான் கரடி பொம்மை வைத்து விளையாடுவேன்.

- ☐ நீ எந்த பொம்மை வைத்து விளையாடுவாய்?
- ☐ நீ எவ்வாறு விளையாடுவாய்?
- ☐ நீ பொம்மை வைத்து விளையாடுவாயா?

5. ஆமாம்! என்னிடம் சாய்வு நாற்காலி இருக்கிறது.

- ☐ உன்னிடம் உள்ள நாற்காலியின் நிறம் என்ன?
- ☐ உன்னிடம் சாய்வு நாற்காலி இருக்கிறதா?
- ☐ உன்னிடம் உள்ள நாற்காலிகள் எத்தனை?